
# அன்பரின் ஊழியம்

ANBARIN OOZHIYAM

மலர் : 10 இதழ் : 5 மே 2024 தனிபிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா - ரூ. 200/-
Vol : 10 Issue No :5 May 2024 Single Copy - 20/- Annual Subscription - Rs. 200/-





# Mrs. மார்கிரேட் ஸ்திரா அவர்கள் மூலம் கர்த்தர் செய்த அற்புதம்

## பெரிய கட்டி விழுந்தது!



ஜனவரி மாதம் 15 நாட்கள் அதிக பெலவீனத்தினால் கஷ்டப்பட்டேன். இருமல் வரும்பொழுது இரத்தம் வந்தது. டெஸ்ட் செய்து பார்த்தபொழுது கட்டி இருப்பது தெரிந்தது. படுக்கையில் இருந்தேன். என் அம்மா bone cancer வியாதியினால் இறந்தார்கள். அவர்களும் நான் அனுபவிக்கிற அனைத்து கஷ்டங்களையும் அனுபவித் தார்கள். அதனால் எனக்கு அதிக பயம் ஏற்பட்டது. ஆனால் கர்த்தர், வாதை உன் கூடாரத்தை அணுகாது என்ற வாக்குத்தத்தம் கொடுத்திருந்தார்.

கவிதா என்ற ஒரு சகோதரி மூலம் திருச்சியில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்திற்கு நான் வந்திருந்தேன். கூட்டத்திற்கு வரும்பொழுது காய்ச்சலுடன்தான் வந்தேன். **Mrs.** மார்கிரேட் ஸ்திரா அம்மா என் தலை மேல் கை வைத்து பாரத்துடன் ஜெபித்தார்கள்.

ஜெபம் முடிந்து வீட்டிற்கு வந்தபிறகு மிகவும் ஆழமான ஒரு இருமல் எனக்கு வந்தது. அந்த இருமலில் ஒரு பெரிய கட்டி அப்படியே வெளியே வந்து விழுந்தது. காய்ச்சல் நின்றது. தொண்டை வலி நீங்கியது. உடல் வலி இல்லை. நீண்ட நாளுக்குப்பிறகு நல்ல தூக்கத்தை கர்த்தர் கொடுத்தார்.

இவ்வளவு விரைவில் பரிபூரண சுகத்தைக் கொடுத்த தேவனுக்கு கோடான கோடி நன்றிகளை செலுத்துகிறேன். எனக்காக பாரத்துடன் ஜெபித்த அம்மாவுக்கும் என்னுடைய நன்றிகளை கூறிக்கொள்கிறேன்.

– திருமதி. மகேஷ்வரி, திருச்சி.



# அன்பரின் ஊழியம்

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...



Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்கள் ஒவ்வொருவருக்கும் நம் தேவாதி தேவனும், நம் கர்த்தாதி கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் என் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

*பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின்மேல் கெம்பீரிப்பார்கள், ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும், அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இரும்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்மேல் செலுத்தவும், அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். சங்கீதம் 149:5-8*

மேற்கூறிய வசனங்கள் பரிசுத்தவான்களாகிய நமக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரம் மற்றும் ஆசீர்வாதம் ஆகும். இதை நாம் ஜெபத்தின் வாயிலாகவும், கர்த்தரை துதித்து ஜெயத்தை பெற்றுக்கொள்வதன் மூலமாகவும், கர்த்தருடைய நாமத்தை உயர்த்தி, அவரை உண்மையும் உத்தமுமாய் பின்பற்றுவதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள இந்த அதிகாரம் உலகப்பிரகாரமாக ஆளுகை செய்வதற்கு அல்ல, நம் ஜெபத்தின் வாயிலாக, ஜாதிகளையும், ஜனங்களையும், ராஜ்யங்களையும் கர்த்தரிடமாய் திருப்பி, அவர்களும் விடுதலையாகி, கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றவே தரப்பட்டிருக்கிறது. ஆகவே தொடர்ந்து நம் தேசத்திற்காக ஜெபியுங்கள்.

இந்த வெயில் நாட்களில் நீங்கள் அனைவரும் நல்ல சுக, பெலத்துடன் இருக்க நாங்கள் ஜெபிக்கிறோம்.

நீங்களும் அன்பரின் ஊழியத்திற்காக தொடர்ந்து ஜெபியுங்கள். ஊழியத்தில் உற்சாகமாய் வேலை செய்யக்கூடிய நல்ல பணியாளர்களை கர்த்தர் அழைத்து வரும்படி ஜெபியுங்கள்.

இதுவரை பத்திரிக்கைக்குரிய வருட சந்தாவை புதுப்பிக்காதவர்கள் உடனடியாக சந்தாதொகையை அனுப்பி பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள்.

கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். மே மாதம்


**ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா**

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-



காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627

Telugu & Hindi : +91 99445 36343, Malayalam: +91 94889 32937, kannada: +91 90031 17205

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி -18

Address: Ministry of Jesus Prayer Centre, 10th Cross Street West Extension, Thillainagar, Trichy- 620018

நாகர்கோவில், சென்னை, ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், பாண்டிச்சேரி, மதுரை மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். இந்த கூட்டங்களின் வாயிலாக ஆத்துமாக்கள் சந்திக்கப்பட, இரட்சிப்பின் சந்தோஷத்தை பெற்றுக்கொள்ள ஜெபியுங்கள். இக்கூட்டங்களை நடத்துவதற்குரிய பணத்தேவைகள் அனைத்தும் கர்த்தரால் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

நமது Ministry of Jesus You Tube சேனலில் வெளிவருகிற அனுதின அற்புதம், அற்புதத்தின் மாலை மற்றும் நேரலை நிகழ்ச்சிகளை தவறாமல் பாருங்கள். அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகளை இன்னும் அதிகரிக்க ஜெபியுங்கள்.

பெலவீனங்கள் மத்தியில் எங்கள் அப்பா, அம்மா இருவரும் கூட்டங்களுக்கு வந்து பங்காளர் களாகிய உங்களை சந்தித்து ஜெபித்து வருகிறார்கள். அவர்களுடைய நல்ல சுகத்திற்காகவும், நீடிய ஆயுளுக்காகவும் ஜெபியுங்கள்.

ஊழியத்தில் கர்த்தர் எங்களை வல்லமையாக பயன்படுத்தவும், எங்களுடைய நல்ல சுகத்திற்காகவும், மகனுடைய படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

கிறிஸ்துவின் பணியில்

**Dr. ஜேன் ஜாஷ்வா**

## இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்

**யோவான் 1:12, கொலோசெயர் 1:13, கொலோசெயர் 2:15, 1தீமோத்தேயு 2:1-3**

## திருச்சியில் உபவாச ஜெபம்

**(வியாதியில் உள்ள சிறு பிள்ளைகளுக்காகவும், வயதான பெரியவர்களுக்காகவும் விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்)**

**நாள் : 2024 மே 7 (செவ்வாய் கிழமை)**

**இடம்: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18**

**நேரம்: காலை 9:30 முதல் மதியம் 1:00 மணிவரை**

**தேவ செய்தி: Dr. ஆனந்த ஸ்திரா**

**தொடர்புக்கு : செல் 9488845627, 0431-2741922**

## திருச்சியில் உபவாச ஜெபம்

**(வியாபாரம் செய்கிறவர்கள் மற்றும் வாலிப பிள்ளைகளுக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்)**

**நாள் : 2024 மே 14 (செவ்வாய் கிழமை)**

**இடம்: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18**

**நேரம்: காலை 9:30 முதல் மதியம் 1:00 மணிவரை**

**தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா**

**தொடர்புக்கு : செல் 9488845627, 0431-2741922**

# அன்பு



தேவ செய்தி : ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ ஜனமே, நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் என்னுடைய அன்பின் வாழ்த்துக்களை உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த புதிய மாதத்தில் நாம் கர்த்தரின் அன்பைக் குறித்து ஆழமாக தியானிப்போம். கர்த்தரின் அன்பை கொண்டாடுவோம்.

உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார், அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார், அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார், அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார். செப்பனியா 3:17 இந்த வசனத்தை குறித்தே நாம் இங்கு தியானிக்க போகிறோம். ஆம் மேற்கூறிய வசனத்தின் பின்பகுதியில் நாம் பார்க்கிறபடி நம் கர்த்தர் உங்கள் வாழ்வில் அன்பாகவே அமர்ந்திருப்பார். உங்கள் மத்தியில் அன்பாகவே எழுந்தருளுவார். கர்த்தருடைய அன்பு உங்கள் வாழ்க்கையில் இருக்கும்பொழுது அனைத்தும் தானாகவே மாற்றம் பெறும். உங்களுக்கு தேவையான சமாதானம், கனம், மகிமை அனைத்தையும் கர்த்தர் தம் அன்பின் மூலமாகவே உங்களுக்கு தருகிறவர். இயேசுவின் அன்பு சகலத்தையும் புதிதாக்கும். ஆகவே எதற்கும் கலங்காதீர்கள்.

## 1. நம்மை ஏமாற்றாத வஞ்சிக்காத தேவ அன்பு

நாம் வாழுகின்ற இந்த காலம் கடைசி காலமாக இருக்கிறது. இந்த கடைசி காலங்களில் உலகமானது பிசாசுகளின் தலைவனாகிய அப்பொல்லியோனின் கையில் ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது. அப்பொல்லியோன் என்பவன் யார்? அவன் செய்கிற பல காரியங்கள் நம் கண்களுக்கு மறைக்கப்பட்டதாக இருக்கலாம். அவன் ஆதியாகமத்தி லிருந்து மனித இனத்துடன் பயணம் செய்துக்கொண்டு தான் இருக்கிறான். ஏவாளை வஞ்சித்தவன். பெரியபாம்பு. (வெளி.12:3) உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது, அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப் பட்டார்கள். வெளி.12:9. (வெளி.9) அவன் வேலை அநேகரை வஞ்சிப்பது. உலகின் பல தலைவர்கள், உலகத்திலுள்ள முன்னணி அமைப்புகள், உலகின் பொருளாதாரம் என அனைத்தையும் வஞ்சிப்பான். ஆலயங்களை வஞ்சிப்பான். இராணுவங்களை வஞ்சிப் பான். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளையும், அவரிடத்தில் அன்பு கூறுகிறவர்களையும் பிசாசால் வஞ்சிக்க முடியாது. இப்படிப்பட்ட நேரத்தில் ஒருவேளை உங்கள் அன்பு கர்த்தர் மேல் முழுமையாக இல்லையென்றால் அவன் உங்களையும் வஞ்சிக்க முயற்சிப்பான்.

பழைய ஏற்பாட்டில் ஆதாம் தேவனோடு இணைந்தே இருந்தான். ஆதாம் தேவனோடு சேர்ந்தே சகலவித மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் பெயர் சூட்டினான். சர்வ சிருஷ்டியையும் படைத்தவர் தம் இடத்தை விட்டு ஆதாமை தேடி அநுதினமும் வந்து

அவனை பார்க்கிறார். ஒரு நண்பனைப்போல ஆண்டவர் அவனுடன் பழகினார். ஒரு நாள் வந்தது. ஏவாள் பாம்பினால் வஞ்சிக்கப்பட்டாள். கீழ்ப்படியாமையினால் பயம் வந்தது. அத்துடன் தேவனோடு உள்ள உறவை, நட்பை,அன்பை ஆதாமும், ஏவாளும் இழந்துவிட்டார்கள். தேவ அன்பை அவர்கள் முழுமையாக சுவைக்காத காரணத்தினால், பிசாசு கொண்டு வந்த சோதனையை அவர்களால் ஜெயிக்க முடியவில்லை.

யோசேப்பின் வாழ்வில் நடந்த பல காரியங் களை நீங்கள் அறிவீர்கள். அவன் சிறுவயதிலிருந்தே பல துரோகங்களை அனுபவித்தவன். அவனுடைய எஜமாட்டியின் தவறான செயல் நிமித்தம் யோசேப்பு மிகவும் துன்பப்பட்டான். ஆதியாகமத்தில் தேவன் யோசேப்புடன் இருந்தார் என்ற வசனம் அடிக்கடி வந்துக்கொண்டே இருக்கும். ஏனென்றால் தேவன் யோசேப்புடன் உள்ள உறவை கொண்டாடினார். அதேப்போல யோசேப்பும் தேவனை நேசித்தான். தேவன் மேல் முழுமையான அன்பை வைத்திருந்தான். அதனால் வேடனுடைய எல்லா கண்ணிக்கும் தப்பினான். யோசேப்பு பாவம் செய்யவும் இல்லை. மனிதரிடம் ஏமாந்து போகவும் இல்லை. அவன் சகோதரரிடம், “நீங்களோ தீமை செய்ய நினைத்தீர்கள். கர்த்தர் அதை நன்மையாகவே முடியப்பண்ணினார்” என உறுதியாக கூறமுடிந்தது. ஆம், அவருக்கு பிரியமானவர்கள் ஏமாந்துபோக கர்த்தர் விடவே மாட்டார். முடிவில் தேவன் அவனை சிங்காசனத்திற்கு உயர்த்தினார். நீங்களும் கர்த்தரின் அன்பை கொண்டாடும்பொழுது ஒருபோதும் ஏமாறவே மாட்டீர்கள்.

இதே போல புதிய ஏற்பாட்டிலும் ஒரு சம்பவம் நடந்தது. கிழக்கத்திய நாடுகளிலிருந்து பயணமாகி வந்த மூன்று ஞானிகள் பெத்லகேமிற்கு வந்தார்கள். அவர்கள் பயணத்தில் நட்சத்திரம் அவர்களை வழி நடத்தியது. மேசியாவை காண்பதற்கு முன் அந்த அன்பை அவர்கள் முழுமையாக நம்பினபடியால், நேசித்தபடியால் தான் காணாத ஒரு குழந்தைக்காக விலையுயர்ந்த பொருட்களை எடுத்து வந்தார்கள். முழுமையான அன்பு இருக்கும்பொழுது நம்பிக்கை வரும். இது அன்பினால் வந்தது. அந்த அன்பை அவர்கள் கொண்டாடி வந்தார்கள். அதனால் தான் ஏரோதுவின் வஞ்சகமான காரியத்திற்கு தேவன் தாமே அவர்களை விலக்கி காத்துக்கொண்டார்.

தேவன் மேல் முழுமையான அன்பு இருக்கும்பொழுதுதான் அவர் மீது வாஞ்சை வரும். ஒருவரை பார்க்க வேண்டும், அவருடன் பேச வேண்டும் என்ற வாஞ்சை அன்பு இருந்தால் மட்டுமே வரும். அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன், என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். சங்.91:14–ன்படி இந்த வாஞ்சை எப்போது வரும்.

நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப் பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. ரோமர் 5:5. ஆம். பரிசுத்த ஆவியினாலே கர்த்தரின் அன்பு நமக்குள் இருக்கும் பொழுது அந்த அன்பு ஒரு நாளும் நம்மை வெட்கப் படுத்தாது. ஒவ்வொரு நாளும் அந்த அன்பை நாம் கொண்டாட வேண்டும். ஆதாம் ஏவாள் அந்த அன்பை இழந்துப்போனார்கள். ஞானிகள், யோசேப்பு அந்த அன்பை இழக்கவில்லை. கர்த்தருடைய அன்பு அவர் களுக்குள் இருந்ததினால் அதை ருசிப்பார்த்தார்கள். இன்றைக்கு நாமும் அந்த அன்பை கொண்டாடுவோம், வெளிப்படுத்துவோம். நமக்கும் அவருக்கும் இடையே உள்ள உறவை கொண்டாடுகிற அன்பாக இருக்க வேண்டும். அது Infinite love–எல்லையில்லா அன்பாக இருக்க வேண்டும்.

## உ. தேவ அன்பு நமக்கு கிருபையை பெற்றுத்தரும்

மோசே அன்பை தேடிக்கொண்டிருந்த ஒரு மனிதன் ஆவான். எகிப்தின் இளவரசனாக வளர்ந்தவன், சகல யுத்தங்களையும், சகல கலை களையும் நன்கு கற்றுத்தேர்ந்தவன். இப்படி இருந்த மோசே தேவனை எப்படி சந்தித்தான்? கர்த்தருடைய அன்பு அவன் மேல் கிருபையாக பொழியப்பட்டது. தேவன் அவன் மேல் பிரியமாயிருந்தபடியால் அவனை தெரிந்துக்கொண்டார். அவன் தேடின அன்பை, தேவன் அவன் மீது பொழிந்தருளினார். மோசேயோடு உறவாடினார், பயன்படுத்தினார்.

வேதாகமத்தில் எனக்கு பிடித்த ஒரு நபர் யாக்கோபு. யாக்கோபு பல தவறுகளை செய்தான். தகப்பனையும் சகோதரனையும் ஏமாற்றினான். ஆனால் ஆண்டவர் அவனை பார்த்து, "ஏன் இந்த தவறை செய்தாய்" என ஒருநாளும் கேட்கவில்லை. அதற்கு பதிலாக கர்த்தர் தம் பரலோக மகிமையை அவனுக்கு காண்பித்து, தேவ தூதர்களை காண்பித்து அவனை மேன்மைப்படுத்தினார். அவன் தவற்றை சுட்டிக்காட்டி அவனை துக்கத்தில் உள்ளாக்கவில்லை. இதுதான் நம் தேவனின் அன்பு.

என் தகப்பனுடைய தேவன் என்னோடு இருந்ததினால் என்னை இவ்வளவாக உயர்த்தினார் என யாக்கோபு கூறுகிறான். உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார் களாக, நீர் அவர்களைக் காப்பாற்றுவீர், உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார் களாக. சங்.5:11. என் உண்மையும் என் கிருபையும் அவனோடிருக்கும், என் நாமத்தினால் அவன் கொம்பு உயரும். சங்.89:24. அவன் கர்த்தருடைய நாமத்தை நேசித்தபடியால் நம்பினான்.

நான் யாக்கோபை காணும்பொழுது கொன்று போடுவேன் என்ற ஒரு முடிவோடு ஏசா இருந்தான். ஆனால் யாப்போக்கின் ஆற்றங்கரையில் யாக்கோபு தேவ அன்பை கொண்டாடிக்கொண்டு இருக்கிறான். நமக்கு முன்பின் தெரியாதவர்களோடு நாம் அன்பை கொண்டாட மாட்டோம். நமக்கு நன்கு அறிந்தவர்கள், நமக்கு எல்லாவிதத்திலும் ஒத்துப்போகிறவர்களோடு மட்டும்தான் நாம் அன்பை கொண்டாடுவோம். அவர்களோடிருக்க விரும்புவோம்.

யாக்கோபு ஏசாவை சந்திக்கும் முன் பயப்படுகிறான். தன் சகோதரனால் ஏதாவது துன்பம் வந்திடுமோ என உள்ளத்தில் கலங்குகிறான். அதனால் ஏசாவை சந்திக்கும்முன் பரிவாரங்களை அனுப்பு கிறான். மனைவிகளை, பிள்ளைகளை மாற்றி மாற்றி நிற்க வைக்கிறான். முடிவில் ஏசா வருகிறான். இருவரும் எதிர்எதிரே சந்திக்கிறார்கள். அப்பொழுது ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ் செய்தான், இருவரும் அழுதார்கள். (ஆதி.33:4) அங்கு சமாதானம் உண்டானது. இது சாதாரண காரியமல்ல. இது கர்த்தருடைய அன்பினால் மட்டுமே சாத்திய மானது. கர்த்தருடைய அன்பு மாறாதது. ஆனால் அந்த அன்பு உங்களையும், உங்களுக்குரியதையும் நிச்சய மாக மாற்றும். என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன், என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும். கர்த்தர் ஆபிரகாமோடு தாம் செய்த உடன்படிக்கையை அந்த இரவில் உறுதிப்படுத்தினார். யாக்கோபின் பிள்ளை களுக்கு எந்த தீங்கும் வராதபடி காப்பாற்றினார். இவ்வாறுதான் கர்த்தருடைய அன்பு நமக்கு கிருபையை முழுமையாக பெற்றுத்தருகிறது.

கர்த்தருடைய அன்பை நீங்கள் கொண்டாடும் பொழுது கிருபை பெருகும். நீங்கள் எங்கெல்லாம் செல்கிறீர்களோ அங்கு அனைவர் கண்களிலும்

உங்களுக்கு தயை கிடைக்கும்படி தேவன் கிருபை செய்வார்.

## 3. தேவ அன்பு நம்மை இரட்சிக்கும்

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16 தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை பூமிக்கு அனுப்பினார். இயேசுவும் மனிதர்களைப்போல எல்லா கஷ்டங்களையும் ருசிபார்த்து, சகலவிதத்திலும் சோதிக்கப்பட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனும் கெட்டுப்போகாதபடி, ஆக்கினைத்தீர்ப்புக்கு உள்ளாகாதபடி, கர்த்தருடைய அன்பு அவர்களை இரட்சிக்கிறது. அவர்களை விடுதலையாக்குகிறது.

இயேசு பூமியில் வாழ்ந்தபொழுது அநேக குருடர்களின் கண்களை திறந்தார். ஆனால் மாற்கு 10:46–52 வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். பிச்சை கேட்டுக்கொண்டிருந்த பர்திமேயு என்ற குருடன், இயேசு அவ்வழியே செல்கிறார் என்பதை அறிந்து, "இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் இரங்கும்" என கத்துகிறான். அவன் கத்துவதைக் கேட்ட அநேகர் அவன் பேசாதிருக்கும்படி அவனை அதட்டினார்கள். ஆனால் அவன் சோர்ந்து போகாமல் இன்னும் அதிகமாய்க் கூப்பிட்டான். அனைத்தையும் அறிந்த இயேசு அவன்மேல் மனமிரங்கி, அவனை அழைத்து வரச்சொல்லி, "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்" என கேட்டு, அவன் பார்வை பெறும்படி உதவி செய்கிறார். இது தான் இயேசுவின் அன்பு. அவர் நிச்சயமாக என்னை நேசிப்பார் என பர்திமேயு தினந்தோறும் இயேசுவின் அன்பை கொண்டாடுகிறவனாக இருந்திருக்க வேண்டும். உலகப்பார்வைக்கு அவன் பிச்சைக்காரன். ஆனால் அவன் இயேசுவை குறித்து கேள்விப்பட்டு, அந்த அன்பை உள்ளத்தில் கொண்டாடினவனாக, அந்த அன்பை நம்பினவனாக இருந்திருக்க வேண்டும். அதனால் தான் இயேசு அவனுக்காக அந்த இடத்தில் நின்று ஒரு அற்புதத்தை செய்து இரட்சித்தார். அந்த இயேசுவின் அன்பை நீங்கள் கொண்டாடும் பொழுது உங்கள் குடும்பத்திற்குள் சமாதானம் உண்டாகும். விடுதலை உண்டாகும்.

இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக, கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு. அவர் இஸ்ரவேலை அதின் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக்கொள்வார். (சங்.130:7–8) தாவீது கர்த்தரிடத்தில் திரளான மீட்பு உண்டு என சொல்கிறான். அவரை நேசிக்கும்பொழுது அந்த அன்பை நீங்கள் ருசி பார்ப்பீர்கள். அவருடைய அன்பை நீங்கள் ருசிபார்க்கும்பொழுது அவருடைய கிருபையை, இரட்சிப்பை, விடுதலையை பெற்றுக் கொள்வீர்கள். ஆம், தேவ ஜனமே, கர்த்தருடைய அன்பை நீங்கள் கொண்டாடும்பொழுதுதான் இத்தனை காரியங்கள் உங்களுக்கு பலனாக கிடைக்கிறது.

## 4. கர்த்தருடைய அன்பு நம்மை ஒருபோதும் புறக்கணிக்காது.

சிம்சோனுடன் தேவன் ஒரு உடன்படிக்கையை பண்ணுகிறார். உடன்படிக்கை எப்படி வரும்? அன்பிலிருந்து தான் உடன்படிக்கை வரும். அதனால் தான் அவனுடைய ஜீவிய காலம் முதல் கர்த்தர் அவனுக்கு பெலனை கொடுத்துக்கொண்டிருந்தார். சிம்சோனோ அந்த அன்பை கொண்டாடவில்லை. அந்த உடன்படிக்கையை வெட்டி தூரப்போட்டான். முடிவில் அவன் கதறுகிறான். எல்லாவற்றையும் இழந்த நிலையிலிருந்து கர்த்தருடைய அன்பை கொண்டாட

ஆரம்பித்தான். ஆண்டவர் அதைப்பார்த்து அவனுக்காக யுத்தம் செய்தார்.

அடுத்து பாவியான ஸ்திரீயை கூட்டத்தினர் அனைவரும் குற்றவாளி என கூறினபொழுது, இயேசுவின் அன்பு அவளை பாவியாக தீர்க்கவில்லை. சுற்றியிருந்த கூட்டத்திற்கே இயேசு ஒரு பாடத்தை கற்பிக்கிறார். "யோவான் 8:11b–இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை, நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார். இவ்வாறு இயேசு அவளை தன் அன்பினால் கவருகிறார். அதன் பயனாக இயேசுவின் சிலுவை அடியில் இருக்கிற பெண்களில் இந்த பாவியான ஸ்திரீயும் நின்று கொண்டு இருந்தாள்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தப்பொழுது உடனிருந்த இரு கள்ளர் களில் ஒருவன் மட்டும், தன்நிலையை உணர்ந்து, இயேசுவே, நீர் தேவனுடைய குமாரன், என்னை நினைவுகூறும் என கதருகிறான். நீங்கள் வேதத்தை வாசிக்கும்பொழுது அதிகாரங்களை மட்டும், வசனங்களை மட்டும் மேற்போக்காக வாசிக்க வேண்டாம். சிந்தனைகளை வாசியுங்கள். உணர்வுகளை கொண்டாடுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் பல காரியங்களை சொல்லித்தருவார். கர்த்தருடைய அன்பு அவரில் அன்புகூர்ந்த கள்ளனை இரட்சித்தது, மீட்டது. பரலோகத்தில் இடம் தந்தது. கர்த்தருடைய அன்பு கள்ளனையும் புறக்கணிக்க வில்லை. கர்த்தருடைய அன்பு அவனையும் பரலோக ராஜ்யத்திற்கு எடுத்து சென்றது.

ஆம், உங்களை ஒருபோதும் புறக்கணிக்காத கர்த்தருடைய அன்பை ஒவ்வொரு நிமிடமும் ருசிபாருங்கள். கர்த்தருடைய அன்பை மதியுங்கள். அப்பொழுது கர்த்தருடைய அன்பு ஒரு விலகாத அன்பாக, விலகாத பாசமாக, விலகாத காதலாக ஒரு அகாப்பே (Agape) அன்பாக உங்களோடு எப்பொழுதும் பயணிக்கும். அந்த அன்பை ருசிபார்த்து விட்டால் உங்களால் பாவம் செய்ய முடியாது. அதற்கு சரியான உதாரணம் யோசேப்பு தான். நீங்கள் இதுவரை பல தவறுகளை செய்திருக்கலாம் அது ஒரு விஷயம் அல்ல. இந்த நேரம் முதல் கர்த்தருடைய அன்பை நீங்கள் ருசிபார்க்க ஆரம்பியுங்கள். கர்த்தருடைய அன்பை கொண்டாடுங்கள்.

## 5. கர்த்தருடைய அன்பு நம்மை சோதனையில் அழிந்து போக விடாது.

அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்ட தினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். எபி.2:18 இந்த வசனத்தின்படி மனிதனுடைய ஒவ்வொரு சோதனையையும் இயேசு ஜெயித்திருக்கிறார். "நான் சோதனைகளை மேற்கொண்டேன். உங்களையும் என் அன்பினால் மேற்கொள்ள வைப்பேன்" என்ற உறுதியை நமக்கு தருகிறார். அதனால் தான் அவர் உங்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் என பவுல் கூறுகிறார்.

ஒருவருக்கு மரணம் நேரிடும்பொழுது அவருடைய உறவுகள் எவ்வளவு வேதனைப்படும் என்பதை லாசருவின் மரணத்தில் இயேசு உணர்ந்த தால் கண்ணீர் விட்டார். ஒரு மனிதனுக்கு கண் பார்வை இல்லையென்றால் அவன் எவ்வளவு கஷ்டப்படுவான் என்பதை பர்தியுமேயு குருடனை சொஸ்தமாக்கின பொழுது இயேசு அறிந்திருந்தார். பிசாசு ஒரு மனிதனை தாக்கும்பொழுது அவன் எவ்வளவு பாதிக்கப்படுகிறான் என்பதையும் இயேசு அறிந்திருந்ததினால் தான் லேகியோன் பிசாசு பிடித்திருந்த மனிதனை தேடி வந்து அவனை விடுதலையாக்கினார்.

இறுதியில் இயேசு கொடிய சிலுவை மரணத்தையும் தன் உடலில் ருசிபார்த்தார். இவ்வாறு

மனிதர்களுடைய அனைத்து கஷ்டங்களையும் அறிந்திருந்த, பாவத்தை மேற்கொண்ட ஒரு பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு. நம்முடைய பலவீனங் களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். எபி.4:15

ஆம், சோதனைகளால் நாம் தோற்று போகாமல் இருக்க கர்த்தருடைய அன்பு நமக்கு தேவை. அன்றாடம் சொல்கிற பல பொய்யில் இருந்து,எல்லா பாவத்திற்கும் இன்றே இயேசுவின் அன்பின் மூலம் ஒரு முற்றுப்புள்ளி வையுங்கள்.

## 6. கர்த்தருடைய அன்பு நமக்காக வழக்காடும்

கர்த்தருடைய அன்பு நம் எதிரிகளை மடங்கடிக்கிற அன்பாக, நமக்காக வழக்காடுகிற அன்பாக இருக்கிறது. ஆபிரகாம் தேவன் மேல் அன்பு வைத்து இருந்ததினால், விசுவாசத்தினால் தேவனுக்கு கீழ்ப்படிந்து பயணத்தை துவங்கினான். அந்த காலத்தில் இருந்த ராஜாக்கள் அழகான பெண்களை கண்டவுடன் அவர்களை தங்களுக்கு உரிமையாக்கி கொள்வார்கள். அதேப்போல அந்த நாட்டின் ராஜா அபிமெலேக்கும் செய்வான் என ஆபிரகாம் அறிந்திருந்தான். அதனால் தன் மனைவி சாராளை சகோதரி என சொல்லி இருந்தான். அங்கே ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினாலே, கேராரின் ராஜாவாகிய அபிமெலேக்கு ஆள் அனுப்பிச் சாராளை அழைப்பித்தான். தேவன் இரவிலே அபிமெலேக்குக்குச் சொப்பனத்திலே தோன்றி: நீ அழைப்பித்த ஸ்திரீயினிமித்தம் நீ செத்தாய், அவள் ஒருவனுடைய மனைவியாயிருக்கிறாளே என்றார். அபிமெலேக்கு அவளைச் சேராதிருந்தான். ஆதி.20:2–5 அந்த இரவு ஆண்டவர் அபிமெலேக்கு ஒரு பயங்கரத்தை ஏற்படுத்தினார். இவ்வாறு அவன் ஆபிரகாமின் மனைவிக்கு எந்த தீங்கும் செய்யாதபடி கர்த்தர் காத்துக்கொண்டார். இவ்வாறு கர்த்தருடைய அன்பு உங்களுக்காக யுத்தம் செய்யும்.

ஆபிரகாம் தேவ அன்பை அதிகமாக கொண்டாடினவன். தேவனிடம் ஆலோசனை கேட்டுக்கொண்டிருந்தவன். ஒவ்வொரு நாளும் வானத்தை நோக்கி கைகளை உயர்த்தி தேவனோடு உறவாடிக்கொண்டிநந்தவன். அதனால் தேவன் ஒரு சிநேகிதனோடு பேசுவது போல அவனோடு பேசிக் கொண்டிருந்தார். யூத சரித்திரத்தின்படி ஆபிரகாமின் தகப்பன் சிலைகளை செய்பவன். அவனுடைய மகனோ உயிருள்ள தேவன் மேல் அன்பு வைத்து இருந்தான். அதனால் தேசங்களை சுதந்தரித்தான், இராஜ்யங்களை சுதந்தரித்தான்,ஆசீர்வாதங்களை சுதந்தரித்தான்.

பிரியமான தேவ ஜனமே, நம்மை ஏமாற்றாத வஞ்சிக்காத கர்த்தருடைய அன்புக்கு நீங்கள் உண்மையாக இருங்கள். அப்பொழுது கர்த்தருடைய அன்பு உங்களுக்கு கிருபையை பெற்றுத்தரும். அனைத்து பாவ சாபத்திலிருந்தும், துன்ப நேரத்திலுமிருந்து கர்த்தருடைய அன்பு ஒன்றே உங்களை இரட்சிக்கும். இந்த உலகமோ, உங்கள் சொந்த உறவுகளோ காரணமில்லாமல் உங்களை புறக்கணித்தாலும், கர்த்தருடைய அன்பு உங்களை ஒருபோதும் புறக்கணிக்காது. அத்துடன் கர்த்தருடைய அன்பு உங்களை சோதனைக்கு உள்ளாக விடாது. தொடர்ந்து கர்த்தருடைய அன்பு உங்களுக்காக வழக்காடும். அநுதினமும் உங்கள் சொல்லாலும், செயலாலும், வாழ்க்கையாலும் அந்த அன்பை கொண்டாடி மகிழுங்கள். மகிமையான காரியங்களை உங்கள் வாழ்வில் காண்பீர்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website)
Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe

UPI Google Pay Paytm PhonePe

இந்த QR code-ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

### வங்கிக் கணக்குகளின் விபரம்



| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

IFS Code: SBIN 0000930
State Bank of India, Cantonment, Trichy Main Branch.

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

**Cell no. 94888 45627, 80987 42638**

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி - 620018.

# 2024 மே மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

01 என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன். (யாத்தி.20:6)

02 உன்னில் நீ அன்புகூறுவதுபோல் பிறனிலும் அன்புகூறுவாயாக; நான் கர்த்தர். (லேவி.19:18)

03 நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப்பலத்தோடும் அன்புகூருவாயாக. (உபா.6:5)

04 உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பற்றிக்கொள்வாயாக. (உபா.30:20)

05 உங்கள் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரும்படி, உங்கள் ஆத்துமாக்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். (யோசு. 23:11)

06 அவரில் அன்புகூருகிறவர்களோ, வல்லமையோடே உதிக்கிற சூரியனைப்போல இருக்கக்கடவர்கள் என்று பாடினார்கள். (நியாயா.5:31)

07 கர்த்தருடைய பரிசுத்தவான்களே, நீங்களெல்லாரும் அவரில் அன்புகூருங்கள். (சங்.31:23)

08 கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெறுத்துவிடுங்கள். (சங்.97:10)

09 தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார். (நீதி.3:12)

10 ...அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களைமீட்டு, பூர்வ நாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச்சுமந்து வந்தார். (ஏசா.63:9)

11 மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன். (ஓசியா 11:4)

12 தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16)

13 தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார். (யோவான் 13:1)

14 நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு. (2யோவான் 1:6)

15 அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம். (1யோவான் 4:9)

16 அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். (1யோவான் 3:16)

17 அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும். (கலாத்தியர் 5:6)

18 அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார். (2கொரி.13:11)

19 கர்த்தர் தம்மில் அன்பு கூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார். (சங்.145:20)

20 ...தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 8:28)

21 கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக. (2தெச.3:5)

22 கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால், அவரில் அன்புகூருகிறேன். (சங்.116:1)

23 கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? (ரோமர் 8:36)

24 நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். (1யோவான் 3:1)

25 பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். (யோவான் 3:35)

26 சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும் நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ளவல்லவர்களாகவும், (எபே.3:18–19)

27 தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். (யோவான் 8:42)

28 தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, ... இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள். யூதா 1:21

29 நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5:8)

30 தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (1யோவான் 4:16)

31 நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. (ரோமர் 8:37)

# Praise Report
# துதி அறிக்கை



## சத்துருவின் கட்டிலிருந்து விடுதலை



ஒரு சில வருடங்களுக்கு முன்பு என் மகள் இரவில் தூங்கும் பொழுது பாம்பு மாதிரி நாக்கை வெளியே நீட்டுவாள், ஒரு மாதிரியான சத்தம் அப்பொழுது கேட்கும். உடனே நான் இயேசுவிடம், “என் மகள் இந்த கட்டிலிருந்து விடுதலையானவுடன் அன்பரின் ஊழியத்தில் சாட்சி சொல்வதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன்” அடுத்த நாளிலிருந்து அந்த பிரச்சனை முற்றிலும் நீங்கி மகள் அமைதியாக உறங்கினாள்.

ஒரு அசுத்த கிரியையினால் நானும் சரியான தூக்கம் இல்லாமல் நீண்ட நாட்களாக கஷ்டப்பட்டேன். மார்ச் மாதம் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்தேன். இங்கு வந்ததிலிருந்து அந்த கிரியை என்னைவிட்டு நீங்கியதை நன்றாக உணர்ந்தேன். எங்கள் இருவருக்கும் அற்புத விடுதலைக்கொடுத்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

– திருமதி. ஏஞ்சல், ஊட்டி.

## அற்புத சுகம் பெற்றேன்!

1990–ம் ஆண்டு முதன்முறையாக நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்தேன். கர்த்தருடைய வார்த்தைகள் என்னை தொட்டது. இரட்சிப்பின் சந்தோஷத்தை அந்த நாளில் பெற்றுக்கொண்டேன். அதிலிருந்து தொடர்ந்து அனைத்து கூட்டத்திற்கும் வர ஆரம்பித்தேன்.

என் அம்மாவையும் கூட்டத்திற்கு வரும்படி பலமுறை நான் கூப்பிட்டுள்ளேன். அம்மா வரமாட்டேன் என சொல்லிக்கொண்டே இருப்பார்கள். 1997–ம் ஆண்டு ஒரு நாள் என் அம்மா மனம்மாறி என்னோடு கூட்டத்திற்கு வந்தார்கள். அந்த நாளில் செய்தி முடிந்து தனிஜெப நேரத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் என் அம்மாவின் கையை ஒரு பக்கம் பிடித்துக்கொண்டு, இன்னொரு பக்கம் வருகிறவர்கள் எல்லாருக்கும் ஜெபித்து அனுப்பிக்கொண்டே இருந்தார்கள். அதன்பின் என் அம்மா வீட்டிற்கு வந்து பார்த்தப்பொழுதுதான் ஆண்டவர் கொடுத்த அற்புத சுகத்தை அறிந்தார்கள். என் அம்மாவின் கையிலிருந்த வீக்கம் முற்றிலும் மாறிவிட்டது. பல வருடங்களாக இருந்த வலியும் நீங்கினதை உணர்ந்து இயேசப்பா ஸ்தோத்திரம் என சொல்லி அம்மா துள்ளிக்குதித்து மகிழ்ந்தார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அம்மாவிற்காக ஜெபித்த சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

– திருமதி. ராகினி புஷ்பக்கலா, நாகர்கோவில்.

## கர்த்தர் உதவி செய்தார்!

நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு கடந்த முறை வந்திருந்தப் பொழுது Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் என் கணவருடைய தலையில் கை வைத்து ஜெபித்துவிட்டு, "நீங்கள் இனோவா (INNOVA) கார் வாங்கு வீர்கள்" என சொன்னார்கள். ஆச்சரியத்துடன் வீட்டிற்கு வந்தோம். ஒரு சில நாட்களில் கர்த்தர் தாமே எங்களுக்கு இரங்கி இனோவா கார் வாங்கும்படி ஒரு அதிசயம் செய்தார். தேவனுக்கே மகிமை!

– திருமதி. கிருபா வின்சென்ட், சூரியக்கோடு.

## பில்லிசூன்ய கட்டிலிருந்து விடுதலை ஆனேன்!



என் வீட்டிற்குள் எப்பொழுதும் ஓயாமல் தூசி வந்துக்கொண்டே இருக்கும். இயல்பு நிலையைக் காட்டிலும் அதிக தூசி என் வீடு முழுவதும் படிந் திருக்கும். சுத்தம் செய்து செய்து சோர்ந்து போய் விடுவேன். அந்த அளவிற்கு தூசிகள் வந்துவிடும். சுத்தம் செய்து தூசிகளை அள்ளி முடிப்பதற்குள் திரும்பவும் தூசி வந்துவிடும். இப்படியாக பல நாட்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந் தேன்.

கடந்த ஆகஸ்ட் மாதம் திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்தில் நான் கலந்துக் கொண்டேன். அப்பொழுது ஜெபவேளையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் தீர்க்கதரிசனமாக, "உன் வீட்டிற்குள் பில்லி சூன்ய பிசாசு தொடர்ந்து தூசியை தூவி விடுகிறது. இன்றிலிருந்து கர்த்தர் உன்னை விடுதலையாக்குகிறார்" என சொன்னார்கள். அதன்பிறகு எங்கள் வீட்டில் தூசியே இல்லை. அற்புதமாய் விடுதலையாக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

– திருமதி. மரகதம், காரைக்குடி.

## நன்றாக பேசுகிறான்! நன்றாக நடக்கிறான்!



என் தம்பியின் மகன் பெயர் டேனியல். 2012–ல் பிறந்தான். வளர வளர ஒரு சில குறைபாடுகள் இருப்பது தெரிந்தது. அவனால் பேச முடியவில்லை. நடக்க முடிய வில்லை. வாயிலிருந்து எச்சில் ஒழுகிக்கொண்டே இருந்தது. அவனுக்கு மூன்றரை வயது நடந்துக் கொண்டிருந்தப்பொழுது, திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு நான் வந்திருந்து, தம்பி மகனுக்காக ஜெபிக்கும்படி ஜெப விண்ணப்பத்தில் எழுதிக்கொடுத்து வந்தேன்.

கர்த்தர் மகனுக்கு அதிசயம் செய்தார். ஒரு சில நாட்களில் அவன் நன்றாக பேச ஆரம்பித்தான், நன்றாக நடக்க ஆரம்பித்தான். இப்பொழுது மற்ற நார்மல் பிள்ளைகளைப்போல எல்லா காரியமும் செய்கிறான். பள்ளிக்கு செல்கிறான். நன்றாக படிக்கிறான். அற்புதம் செய்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். அன்பரின் ஊழியத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

– திருமதி. ஜாக்குலின் ரீட்டா, திருச்சி.

## நீட் தேர்வில் மகத்தான வெற்றி!




என்னுடைய மூத்த மகன் நீட் தேர்விற்காக படித்துக் கொண்டிருந்த நேரம் திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்தேன். Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் என் மகனுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் பாரத்துடன் ஜெபித்துவிட்டு உங்கள் மகனுக்கு மருத்துவ படிப்பிற்கான இடம் கிடைக்க ஆண்டவர் கட்டாயம் உதவி செய்வார் என சொல்லி தைரியப்படுத்தி அனுப்பினார்கள்.

மகன் நீட் தேர்வில் 635 மதிப்பெண்கள் எடுத்து Government Seat கிடைத்து, CMC-ல் தற்பொழுது 2-ம் ஆண்டு படித்துக்கொண்டிருக்கிறான். ஆண்டவர் காட்டிய இந்த மகா பெரிய தயவுக்காகவும், நல்ல கல்லூரியில் இடம் கிடைக்க கர்த்தர் உதவி செய்ததற்காகவும் கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். – Dr. ஷகினா, பாளையங்கோட்டை.

## கண்பார்வை கிடைத்தது! பேச ஆரம்பித்தான்! நன்றாக நடக்க ஆரம்பித்தான்!

என் மகனுக்கு சிறுவயதிலிருந்தே ஒரு கண்ணில் பார்வை இல்லை. மற்றொரு கண்ணிலும் தெளிவான பார்வை இல்லை. அத்துடன் அவனால் பேச முடியாது, சரியாக நடக்க முடியாத பிரச்சனைகள் இருந்தது. அப்பொழுது நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு மகனை அழைத்து வந்து Dr. ஆனந்த



ஸ்திரா அவர்களிடம் மகனை காண்பித்து மகனுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன்.

சகோதரர் என் மகனுக்காக ஊக்கமாய் ஜெபித்தார்கள். அதன்பின் திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்திற்கும் நான் மகனை அழைத்து வந்தேன். அப்பொழுது ஐயாவும், ஐயா குடும்பத்தினர் அனைவரும் அவனுக்காக ஜெபித்தார்கள். ஒரு சில நாட்களில் மகனுக்கு தெளிவான கண்பார்வை கிடைத்தது. நன்றாக பேசவும், நன்றாக நடக்கவும் ஆரம்பித்தான். இப்பொழுது கல்லூரி 2-ம் ஆண்டு படித்துக்கொண்டிருக்கிறான். அற்புத சுகம் கொடுத்த கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரம். ஐயா மற்றும் குடும்பத்தினருக்கும் என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

– திருமதி. மேரி விஜயராணி, திருவட்டாறு.

## வேலையின்றி தவித்த மகனுக்கு அரசு வேலை கிடைக்கும்படி அற்புதம் செய்த தேவன்!

எனது மகன் சகாசீலசுதன் வயது 41, ராணுவத்தில் 15 ஆண்டுகள் பணிபுரிந்து 2020ல் ஓய்வுபெற்று வீட்டிற்கு வந்தான். மேற்கொண்டு எந்த ஒரு வேலைக்கும் செல்லவில்லை. கடந்த பிப்ரவரி மாதம் நாகர்கோவிலில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்திருந்து, ஜெப விண்ணப்பத்தில் மகனுக்கு வேலை கிடைக்க

ஜெபிக்கும்படி எழுதியிருந்தேன். அதே மாதம் 21ம் தேதி உங்கள் மகனுக்கு தகுதிக்கேற்ற வேலையை தேவன் தருவார் என்று ஐயா பதில் கடிதம் எழுதி அனுப்பினார்கள். கர்த்தர் மனமிரங்கினார்! மகனுக்கு தற்போது ஆவின்பால் நிறுவனத்தில் கிளார்க் வேலை கிடைத்துள்ளது. ஜெபித்த ஐயா குடும்பத்தினருக்கு எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம். வேலை கிடைக்கும்படி கிருபை செய்த தேவனுக்கு எங்கள் ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறோம்.

– திருமதி. பாற்கவி, நாகர்கோவில்.





## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in



# கர்த்தரை தேடுங்கள்

தேவ செய்தி : திருமதி. மார்கிரேட் ஸ்திரா

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என்னுடைய அன்பின் வாழ்த்துக்களை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த புதிய மாதத்தில் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மாறாத கிருபை உங்களோடு தங்கி உங்களை ஆசீர்வதித்து காப்பதாக! இந்த மாத தியானத்திற்கு கர்த்தர் கொடுத்த வார்த்தை, நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டார். சங்கீதம் 34:4 இந்த வசனத்தின் அடிப்படையில் "கர்த்தரை தேடுங்கள்" என்ற தலைப்பில் நாம் தியானிப்போம்.

இன்றைய காலகட்டத்தில் பலவிதமான வியாதிகள், பல்வேறு கொடுமைகள், ஆசீர்வாத குறைபாடுகள், சமாதானமின்மை போன்றவை மக்களை அதிகமாக சோர்வுக்கு உள்ளாக்கி விடுகிறது. என்னுடைய பாடுகளுக்கு முடிவே இல்லையா என நினைப்பவர்கள் இன்று அதிகம் உண்டு. கர்த்தரை தேடும்பொழுது அனைத்து பிரச்சனைகளுக்கும் ஒரு முடிவு உண்டு. அனைத்து கட்டுகளிலிருந்தும் உங்களை விடுதலையாக்க கர்த்தரால் மட்டுமே முடியும்.

என்னுடைய வாழ்க்கையிலும் நெருஞ்சில் முள் போன்ற சூழலில் நான் கஷ்டப்பட்டு இருக்கிறேன். அந்தநேரத்தில் கர்த்தரை நான் தேடினபொழுது அவர் எனக்கு செவி கொடுத்து, என்னை கைவிடாமல், இம்மட்டும் பாதுகாத்து கொண்டிருக்கிறார்.

## கர்த்தரை எப்படி தேட வேண்டும்?

அவருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மைபாராட்டுங்கள், கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக. கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள், அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள். சங்.105:3–4

கர்த்தருடைய சமூகத்தை நாம் நித்தமும் தேடவேண்டும் என ஆண்டவர் விரும்புகிறார். தாவீது அவ்வாறே ஆண்டவரை நித்தமும் தேடக்கூடியவனாக இருந்தான். அதனால் அவன் வாழ்க்கையில் வந்த அத்தனை போராட்டங்களையும் எதிர்கொள்வதற்கான பெலன் அவனுக்கு கர்த்தரிடமிருந்து வந்தது.

நீங்கள் நினைக்கலாம் நான் வேலைக்கு செல்கிறேன். வீட்டில் பல வேலைகள் உண்டு. பல பொறுப்புகளில் இருக்கிறேன். இதன் மத்தியில் நான் எப்படி தேவனை தேட முடியும் என யோசிக்கலாம். உங்களுக்கு ஒருநாள் முழுவதும் உலகப் பிரகாரமான அலுவல்கள் இருந்தாலும், உங்கள் உள்ளமானது தேவனோடு பேசக்கூடியதாக, தேவனை ஸ்தோத்தரிக்க கூடியதாக இருக்கவேண்டும். உங்கள் வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகள் ஏராளம் இருக்கலாம். அதை நினைத்து தியானித்து கர்த்தருக்கு நன்றி சொல்ல மறவாதீர்கள். சமையல் அறையில் இருந்துக்கூட கர்த்தரை மகிமைப்படுத்தமுடியும். உங்கள் பயணங்களில்கூட கர்த்தரை துதித்துக் கொண்டே செல்லலாம். கர்த்தரை தேடும்பொழுது உங்கள் இருதயம் மகிழும். சோர்வுகள், கவலைகள், பயங்கள் அனைத்தும் நீங்கிவிடும்.

கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள், அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். ஏசாயா 55:6. கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயங்கள் என பல உண்டு. உங்களுடைய குடும்ப ஜெபம், தனி ஜெபத்தில் கர்த்தருடைய உடனிருப்பை நீங்கள் நன்கு உணரலாம். அத்துடன் நீங்கள் ஆலயத்திற்கு செல்லும்பொழுதும், நம்முடைய கூட்டங்களுக்கு வரும்பொழுதும் கர்த்தர் சமீபமாயிருப்பதை உணர்வீர்கள். ஆகவே அத்தகைய சபை கூடுதலை விட்டு விடாதீர்கள். நம்முடைய கூட்டங்களுக்கும் தவறாமல் வந்து கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். அவர் மகிமைப்படும்பொழுது உங்களை ஆசீர்வதிப்பார்.

## கர்த்தரை தேடுவதினால் உங்கள் வாழ்வு செழிப்பாகும்!

இன்றைக்கு நிறைய குடும்பங்களில் ஒரு மந்தமான நிலை, சமாதானகுறைவு, திருப்தியற்ற நிலை, கடன் பாரங்கள், பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கவலைகள், வியாதிகளின் அகோரங்கள் நிறைந்து காணப்படுகிறது. சோர்ந்துபோகாதீர்கள். சமாதான காரணரை நீங்கள் தேடும்பொழுது உங்கள் குடும்பத்தில் சமாதானம் உண்டாகும்.

நாங்கள் வாடகை வீட்டில் இருந்த நாட்களில் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்தோம். ஊழியத்தில் எங்களை நேரில் பார்த்து ஜெபிக்க அநேகர் வீட்டிற்கு வருவார்கள். அப்பொழுது வீட்டின் உரிமையாளர் எங்கள் வீட்டிற்குள் வந்து கால்களால் தரையை தடவிப் பார்த்து, “ஏராளமானபேர் இங்கு வந்து செல்வதினால் தரையே தேய்ந்துவிட்டது” என சொல்வார்கள். அடிக்கடி வாடகையை உயர்த்தி கொண்டே இருப்பார்கள். இதனால் நாங்கள் அதிக வேதனை அடைந்தோம். அதனால் பலநாட்கள் நான் உபவாசம் இருந்து சொந்த வீட்டிற்காக ஜெபிக்க ஆரம்பித்தேன். ஒரு சில நாட்களில் வங்கியில் கடன் பெற்று வீடுகட்டுவதற்காக முயற்சித்தப்பொழுது எங்களுக்கு வங்கி கடன் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டது. வங்கி கடன் கிடைக்காமல் போய்விடுமோ என நினைத்த நேரத்தில் அற்புதமாய் வங்கி கடன் பெற்று வீட்டை கட்டி முடிக்க ஆண்டவர் உதவி செய்தார். இவ்வாறு கர்த்தரை தேடும்பொழுது ஆண்டவர் நம் வாழ்வை செழிப்பாக்குகிறார். நம்மை ஆசீர்வதிக்கிறார்.

உம்முடைய பிராகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்து கொண்டு சேர்த்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான். உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தி யாவோம். சங்.65:4–ன்படி கர்த்தருடைய பரிசுத்த ஆலயத்திற்குரிய ஆசீர்வாதங்கள், நன்மைகள் என ஆண்டவர் பலவற்றைவைத்திருக்கிறார். அவைகளை நம்மால் காணமுடியாது. ஆனால் நீங்கள் விசுவாசித்து கர்த்தரை தேடிவரும்பொழுது அத்தகைய ஆசீர்வாதங் களை நன்மைகளை உங்கள் வாழ்வில் உணர்வீர்கள், அனுபவிக்க ஆரம்பிப்பீர்கள். இவ்வாறு ஆண்டவர் அவருடைய வீட்டின் நன்மையால் உங்களை திருப்தியாக்குவார். நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போல உங்கள் வாழ்வை செழிப்பாக்குவார். கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகாவறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார், நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய். ஏசாயா 58:11

## கர்த்தரை தேடுவதினால் நிறைவான பலன் உண்டு!

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம், ஏனென்றால்,

தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். எபி.11:6 கர்த்தரை முழுமனதுடன் தேடும்பொழுது உங்கள் வாழ்வில் ஒரு நன்மையும் குறைவுபடாது. அவரை தேடுகிறவர்களுக்கு அவர் பலன் தருகிறவராகவே இருக்கிறார். அதுவும் நிறைவான பலன் தருகிறவராகவே இருக்கிறார். உங்கள் குடும்பத்தின் ஆசீர்வாதம், பிள்ளைகளின் ஆசீர்வாதம், நல்ல சுகம், மற்றும் சமாதானம், சந்தோஷத்தைத் தந்து ஒருநன்மையும் குறைவுபடாமல் காத்துபலன் அளிப்பார். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது. சங்.34:10

மோவாப் தேசத்திலிருந்து வந்த ரூத்தின் வாழ்க்கையில்கூட கர்த்தர் நிறைவான பலனை தந்து ஆசீர்வதித்தார். உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக. ரூத் 2:12

நீங்கள் செய்ய வேண்டியது கர்த்தரை முழு மனதுடன் தேடவேண்டும். வெறும் நன்மைகளுக்காக மட்டும் அல்ல, உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களுக்காக மட்டும் அல்ல, உண்மையான அன்போடும், உத்தம இருதயத்தோடும் அவரை தேடுங்கள். அப்பொழுது கண்டடைவீர்கள்.

நீங்கள் கடினமாக உழைத்தும் ஆசீர்வாதம் இல்லையே என நினைத்துக் கொண்டிருக்கலாம், பல்வேறு தேவைகள் இருக்கலாம், பல காரியங்களில் தடைகள் இருக்கலாம், வேலை இல்லையே இனி எப்படி வாழப்போகிறேன் என்ற கலக்கம் இருக்கலாம். சோர்ந்து போகாதீர்கள். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுங்கள், அப்பொழுது அனைத்தும் உங்களுக்கு அதிகமாகவே கொடுக்கப்படும். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். மத்.6:33

அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
நம்பிக்கை TELEVISION
வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 முதல் 9.00 வரை

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
புதன், வியாழன், வெள்ளி,
இரவு 7.00 முதல் 7.30 வரை

மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
சனி
இரவு 7.30 முதல் 8.00 வரை



# SJ SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

- நீதிமானுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும்; (நீதி.10:21)
- மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத் 25:40)

மார்ச் 29–ம் தேதி அன்று சேலம் மாவட்டம் மின்னாம்பள்ளியில் உள்ள SKB மஹால் மண்டபத்தில் S.J.SAVES TRUST–ன் ஸ்தாபகர் ஐயா Dr. ஆனந்த ஸ்திரா அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

S.J.SAVES TRUST–டியூஷன் சென்டரில் படிக்கிற மாணவ, மாணவியர்கள் 300 பேர் மற்றும் பிள்ளைகளுக்கு பாடம் கற்பிக்கிற ஆசிரியர்களும் வந்திருந்தனர். 13 கிராமங்களில் உள்ள Tuition Center மற்றும் Care Center–ல் படிக்கிற பிள்ளைகள் 2 வயது முதல் 15 வயது வரை இருக்கின்றனர். இந்த பிள்ளைகளில் ஒரு சிலருக்கு கண்பார்வை இல்லை, ஒரு சிலருக்கு காது கேட்காது, வாய் பேசாத பிள்ளைகளும் இருக்கின்றனர். சில பிள்ளைகளின் தந்தைமார்கள் வெளியூர்களுக்கு சென்று வருடக்கணக்கில் திரும்பி வருவது இல்லை. அதனால் நிறைய பிள்ளைகளுக்கு தங்கள் தகப்பன் யார் என தெரியாத நிலையில் கண்ணீருடன் வாழ்கிறார்கள்.

ஒரு சில பிள்ளைகளின் பெற்றோர்கள் கடினமான வேலைகள் (கல் உடைக்கும் தொழில்) செய்வதின் நிமித்தம் குடித்து குடித்து பெலவீனப்பட்டு இறந்தும் விடுகின்றனர். ஒரு சில பெற்றோர்கள் கடன் பாரம் தாங்காமல் தற்கொலை செய்துக்கொள்கின்றனர். இத்தகைய நிலையில் உள்ள குடும்பங்களிலிருந்து தான் பலபிள்ளைகள் நம் டியூஷன் சென்டருக்கு வந்து படிக்கின்றனர்.

ஐயா அவர்கள் இந்த பிள்ளைகளுக்கு சின்ன சின்ன கதைகள் மூலம் பல அறிவுரைகளை கூறி, அவர்கள் எதிர்காலத்தில் எப்படி ஒழுக்கத்துடன், பாதுகாப்புடன் வாழவேண்டும் என்பதையும் கூறினார்.

பிள்ளைகள் அனைவரும் ஐயாவின் மேல் உள்ள தங்கள் அன்பை வெளிக்காட்டும் வகையில் நடனம், வாழ்த்துப்பாடல்களை பாடி பிறந்தநாள் விழாவை சிறப்பித்தனர். ஐயாவிற்கு அன்பளிப்புகளையும் கொடுத்து மகிழ்ந்தனர்.

ஐயா அவர்கள் அன்பு பிள்ளைகளுடன் இணைந்து பிறந்தநாள் கேக்கை கட்செய்து, சிறுபிள்ளைகளுக்கு கேக்கை ஊட்டினார்கள். வந்திருந்த அனைவருக்கும் சிக்கன் பிரியாணி, கேக், சாக்லேட், இனிப்பு, கார வகைகள் கொடுக்கப்பட்டது.

அத்துடன் வயதான ஏழை தாய்மார்கள், விதவைகள் என மொத்தம் 60 பேர் கலந்துக் கொண்டனர். அவர்களுக்கு புரோட்டின் பவுடர், சத்துடானிக்கை ஐயா அவர்கள் வழங்கினார்கள். வயதான தந்தைமார்களுக்கு புது சட்டை, வேஷ்டியும் கொடுத்தார்கள்.

பாடுபட்டு மரித்த கிறிஸ்தவர்களின் பிள்ளைகள் மற்றும் மரித்த மிஷனெரிகளின் பெண் பிள்ளைகள் யாராவது ஆதரவற்ற நிலையில் இருந்தால் எங்களிடம் தெரிவியுங்கள். நாங்கள் அவர்களுக்கு உயர்ந்த கல்வியும் பாதுகாப்பும் கொடுத்து வளர்க்க இருக்கிறோம்.


## ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய

***Bank A/c. Name : S J SAVES TRUST***
***Account No. 019150310875369***
***Bank Name : Tamilnadu Mercantile Bank***
***Branch : Palakarai, Trichy***
***IFSC Code : TMBL 0000019***
***A/c Type : Current***

## மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய

***Bank A/c. Name : S J SAVES TRUST***
***Account No. 36477148891***
***Bank Name : State Bank of India***
***Branch : Cantonment, Trichy Main Branch***
***IFSC Code : SBIN 0000930***
***A/c Type : Current***

**Telugu Whats App No: + 91 91770 87860**

**Tamil Whats App No: +91 95004 87059**

**Malayalam Whats App No: +91 94889 32937**

## சேலம் மாவட்டம் மின்னாம்பள்ளியில் உள்ள SKD மஹால் மண்டபத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் தனது பிறந்தநாளை ஏழை எளிய பிள்ளைகளுடன் இணைந்து சிறப்பித்த புகைப்படத் தொகுப்பு



























# உலக செய்திகள்



- ஆக்சிஜன்... கொரோனா காலத்தில் நம்மை இதுதான் உலகத்தில் மிகப்பெரியது என உணர்த்திய வார்த்தை. நல்ல ஆக்சிஜன் இல்லை என்றால் நம்மால் வாழ முடியாது. கொரோனா பெருந்தொற்றின் போது பல இன்னுயிர்களை நாம் இழந்தது ஆக்சிஜன் கிடைக்காததால் தான். அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஆக்சிஜனை கண்டு பிடித்தவர் இங்கிலாந்து நாட்டை சேர்ந்த ஜோசப் ப்ரீஸ்ட்லி.
- இங்கிலாந்தில் பிறந்த ப்ரீஸ்ட்லி ஒரு தேவாலயத்தில் பாதிரியாராக வாரம் ஒரு பவுண்டு சம்பளம் வாங்கினார். எனவே வருமானத்திற்காக ஒரு பள்ளியில் ஆசிரியராகவும் சேர்ந்தார்.
- அவர் பாதிரியராக இருந்த ஆலயத்தின் அருகே மதுபானம் தயாரிக்கும் தொழிற்சாலை இயங்கி வந்தது. அந்த ஆலையில் இருந்து காற்றில் வெளியேறிய துர்நாற்றத்தால் அவர் பெரிதும் வேதனைப்பட்டார். அந்த ஆலைக்கு சென்று அவர் பார்த்தபோது சாராயம் காய்ச்சும் தொட்டியில் இருந்துதான் அந்த துர்நாற்றம் வீசும் ஆவி வெளியேறுகிறது என்பதை கண்டுபிடித்தார்.
- இதை அடுத்து அந்த ஆவியை ஆராய்ச்சி செய்ய ப்ரீஸ்ட்லி முடிவு செய்தார். இதற்காக ஆலை நிர்வாகத்திடம் அனுமதி பெற்று ஒரு பெரிய கண்ணாடி குடுவையில் சாராயம் காய்ச்சும் தொட்டியில் இருந்து வெளியேறும் ஆவியை அடைத்து எடுத்து சென்றார். கண்ணாடி புட்டியை லேசாக திறந்து அதன் அருகே எரியும் தீக்குச்சியை கொண்டு சென்றார். உடனே தீ அணைந்தது. இதனால் அந்த ஆவியில் தீயை அணைக்கும் வாயு இருப்பதை அறிந்து தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டார். அந்த ஆவியை தனித்தனியாக பிரிக்க முடிவு செய்தார். அதில் அவர் வெற்றியும் பெற்றார். அவர் முதலில் கண்டுபிடித்தது கார்பன்டை ஆக்சைடு எனப்படும் கரியமிலவாயு. அதில் சில வாயுக்களையும் சேர்த்து ஆக்சிஜனை கண்டுபிடித்தார்.
- ப்ரீஸ்ட்லி 2 எலிகளை சோதனைக்கு எடுத்துக்கொண்டார். அவற்றை 2 ஜாடிக்குள் போட்டு மூடிவிட்டார். ஒரு ஜாடியில் ஒரு எலியை வெறுமனே போட்டு மூடிவிட்டார். மற்றொரு ஜாடியில் தான் கண்டுபிடித்த ஆக்சிஜனை செலுத்தி அதற்குள் மற்றொரு எலியை போட்டு மூடிவிட்டார். சிறிது நேரத்திற்குப் பிறகு 2 ஜாடியையும் திறந்து பார்த்தார். முதல் ஜாடியில் இருந்த எலி இறந்து கிடந்தது. ஆக்சிஜன் செலுத்தப்பட்ட ஜாடியில் இருந்த எலி துள்ளிக்குதித்து விளையாடிக்கொண்டிருந்தது. சாதாரண காற்றில் இருந்த ஆக்சிஜன் தீர்ந்துபோனதால் முதல் எலி மரணமடைந்தது என்பதை கண்டறிந்தார்.
- தொடர்ந்து மனிதனும் மற்ற உயிரினங்களும் உயிர் வாழ, ஆக்சிஜன் தேவை என்ற முடிவுக்கு வந்தார். இதைத் தொடர்ந்து தானே ஆக்சிஜனை நேரடியாக சோதித்துப் பார்த்தார். அதை அவர் சுவாசித்தபோது அவருக்கு புத்துணர்ச்சி கிடைத்தது. அவர் கண்டுபிடித்த செயற்கை வாயு இன்று பல உயிர்களை காப்பாற்றி வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

**திருச்சியில்**

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

**மே 25** சனிக் கிழமை

**இடம் : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்**
**10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,**
**தில்லைநகர், திருச்சி – 18.**

**நேரம் : காலை 9.30 மணி முதல் 2.00 மணி வரை**

**தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்**

(கூட்ட முடிவில் தனி ஜெபம் ஏறெடுக்கப்படும்)

# அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

## சென்னையில்

**நாள் : ஜுன் 17 திங்கட்கிழமை** (அரசு விடுமுறை)

**நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை**

**இடம் : BKN SKIDMORE ஹால், ரித்தர்டன் ரோடு, வெப்பேரி, சென்னை.**



**தேவ செய்தியாளர்கள்**

**Dr. ஆனந்த ஸ்திரா**
**Mrs. மார்கிரேட் ஸ்திரா**

**தொடர்புக்கு : 0431 – 2741922 & 94888 45627**

# We are Hiring!!!

**ACCOUNTANT**

(B.com. / M.com. Graduates)
Skills Required : Tally ERP 9

*Apply to*
ministryofjesushr@gmail.com

# ஸ்வர்ணரோலா
## 1452-1498



இத்தாலியில் பிளாரன்ஸ் என்ற பட்டணம் இருந்தது. அங்குள்ள தேவாலயத்தில் மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்தது. ஜனங்கள் உட்கார இடமின்றி அங்குமிங்கும் கம்பிகளைப் பிடித்தபடி தொங்கிக் கொண்டிருந்தார்கள். இதற்கு காரணம் என்ன?

இத்தாலியில் உள்ள பராரா என்ற ஊரில் 1452–ம் ஆண்டு பிறந்த ஸ்வர்ணரோலா என்பவரே ஆவார். இவருடைய பிரசங்கத்தை கேட்பதற்காக இந்த மக்கள் கூட்டம் இவ்வாறு முண்டி அடித்துக் கொண்டிருந்தது. அவர் அப்படி என்ன பிரசங்கித்தார் என்ற கேள்வி வருகிறதா?

பாவத்தைக் குறித்த அவரது பிரசங்கம் அனைவரது உள்ளத்திலும் அம்பு போன்று பாய்ந்தது. வல்லமையான தேவ வார்த்தைகள் மக்களின் பாவ வாழ்வைக் கழுவ ஆரம்பித்தது. மக்கள் கதறி அழுது தங்கள் பாவங்களை அறிக்கை செய்தனர், இரட்சிப்பின் சந்தோஷத்தினால் நிறையப் பெற்றனர்.

## தனிப்பட்ட வாழ்வு

ஸ்வர்ணரோலா அடிக்கடி உபவாசிப்பதும், முழங்காலில் மணிக்கணக்காக நின்று ஜெபிப்பதுமே அவருக்கு மிகுந்த தைரியத்தையும் மக்கள் பேரில் அதிக கரிசனையையும் தந்தது.

பாவத்தைக் குறித்த பிரசங்கங்களைப் பலர் இன்றும் விரும்புவதில்லை. அந்த நாட்களிலும் அப்படித்தான் காணப்பட்டது. இந்நிலைமையை மாற்றிய பெருமை ஸ்வர்ணரோலாவையே சாரும். பாவத்தைக் குறித்த பிரசங்கத்தை செய்து விட்டு அவர் பட்டணங்களை விட்டு விடைபெறும்போது ஆண்களும், பெண்களும் கண்ணீர் விட்டு அழுதுக் கொண்டிருப்பார்கள்.

## இரத்த சாட்சியாக மரித்தார்

ஸ்வர்ணரோலா மூலம் ஆவியானவர் பலகாரியங்களைத் தீர்க்கதரிசனமாக அறிவித்தார். அதனால் அவர் திருச்சபையின் மூடத்தனங்களையும், சீர்கேடுகளையும் கண்டித்து பேசினார். இதனால் போப்பானவரால் சபைக்குப் புறம்பாக்கப்பட்டார்.

1498–ம் ஆண்டு ஆறாம் அலெக்ஸாண்டர் என்ற போப், ஸ்வர்ணரோலாவைத் தீயிலிட்டு எரித்துக் கொல்லும்படி கட்டளையிட்டார். தன் முடிவை ஏற்கனவே அறிந்திருந்த ஸ்வர்ணரோலா மரிக்குந்தருணத்தில் தனக்காக ஆண்டவர் பட்டபாடுகளை எண்ணியபடியே பரலோகம் சென்றார்.

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

**ஈரோட்டில்**
**அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்**

இடம் : CSI பாரிஸ் ஹால், டெலிபோன் பவன் அருகில், பிரப் ரோடு, ஈரோடு.

மே 4 சனிக் கிழமை

நேரம் : காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை

**கோயம்புத்தூரில்**
**அற்புதத்தின் மாலை**

இடம் : TELC சபா மண்டபம், மணிக்கூண்டு அருகில், டவுன் ஹால், கோயம்புத்தூர்.

மே 5 ஞாயிற்றுக் கிழமை

நேரம் : மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை



தேவ செய்தி

**Dr. ஆனந்த ஸ்திரா**
**Mrs. மார்கிரேட் ஸ்திரா**

கூட்ட முடிவில் தனி ஜெபம் ஏறெடுக்கப்படும்.

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டங்கள்

நாள்
மே 11
சனிக்கிழமை

## வேலூரில்

இடம் : ஏலிம் கார்டன், வேலூர் புதிய பஸ் நிலையம் எதிரில், சர்வே எண்:605, பாலதோரம் தெரு, வேலூர்.

## மதுரையில்

இடம் : சிவபாக்யா மஹால்,
ஆரப்பாளையம் பேருந்துநிலையம் அருகில்,
69, DD மெயின்ரோடு,
பிளாக் 3, ஞான ஒலிவபுரம், மதுரை 16.

நாள்
மே 18
சனிக்கிழமை

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

**தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா**

கூட்ட முடிவில் தனி ஜெபம் ஏறெடுக்கப்படும்.

தொடர்புக்கு: 94888 45627, 0431 – 2741922

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,